நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

07.12.2022

## பாபர் மசூதி இடிப்பு தினம்

# மதுரையில் இஸ்லாமிய அமைப்புகள் ஆர்ப்பாட்டம்



மதுரையில் எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பெண்கள்.

**மதுரை, டிச. 6:** பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி, மதுரையில் இஸ்லாமிய அமைப்புகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

எஸ்டிபிஐ கட்சியின் மதுரை தெற்கு, வடக்கு ஒருங்கிணைந்த மாவட்ட நிர்வாகிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மதுரை தெற்குவாசல் சின்னக் கடைத் தெருவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தலைமை வகித்தார்.

மதுரை தெற்கு மாவட்டத் தலைவர் சீமான் சிக்கந்தர் வரவேற்றார். வடக்கு மாவட்ட துணைத் தலைவர் ஜாபர் சுல்தான் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, தொகுதி நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் எஸ்டிபிஐ கட்சியின் மாநில பொதுச் செயலர் நிஜாம் முகைதீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலர் வெ.கனியமுதன், நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் செ.வெற்றிக் குமரன், மக்கள் கண்காணிப்பகம் நிறுவனர் ஹென்றி திபேன், அ.தி.ம.மு.க தலைவர் பசும்பொன் பாண்டியன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது வழிபாட்டுத் தலங்கள் சட்டம்-1991-ஐ அமல்படுத்தி அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. முடிவில் மாவட்ட பொதுச் செயலர் சாகுல் ஹமீது நன்றியுரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உள்பட 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**தமுமுக ஆர்ப்பாட்டம்:** மதுரை மாவட்ட தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் மதுரை தெற்குவெளி வீதியில் உள்ள குப்புபிள்ளைத் தோப்புப் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டச் செயலர் சீனி அகமது தலைமை வகித்தார்.

இதில், மாவட்ட, பகுதி நிர்வாகிகள் உள்பட 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பாபர் மசூதி இடிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்க வலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தையொட்டி, அந்தப் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.